*இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் பணியினை விரைவுபடுத்தி, அங்குள்ள 1,330 பயனாளிகளுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட ஆவன செய்வாரா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

*முற்பகல் 10—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் (நிலை) ஆணை எண் 21—ன்கீழே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 'அந்த நிலம், நத்தம் நிலமாக வகைப்பாடு* (classification) *செய்யப்பட்டிருக்கிறது; அங்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏற்ற வகையிலே அந்த இடம் மண் கொட்டி மேடாக அமைக்கப்பட்டிருக்கிறது' என்கிற கருத்தையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தகுதியுடைய இடங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏழையெளியோருடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்காக இதுவரையில் 20 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிய ஒரே அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.* (மேசையைத் தட்டும் ஒலி) *ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தத் திட்டத்திலே என்ன சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது? ஏன் அந்தப் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது; அல்லது ஏன் பின்தங்கியிருக்கிறது என்பது குறித்து உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி, அங்கு தகுதியுள்ள பயனாளிகள் வருவாய் (நிலை) ஆணை எண் 21—ன்கீழே வரையறைக்குட்பட்டு வருவார்களேயானால், உடனடியாகப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

*2018 ஜூன் 25]*

**206—**

## சார்–பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***9403—திருமதி பொன். சரஸ்வதி:**

*மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் பதிவு மாவட்டத்தில் திருச்செங்கோடு சார்–பதிவாளர் அலுவலகம்* BSNL Building, *ஈரோடு ரோடு, திருச்செங்கோடு என்ற முகவரியில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. இச்சார்–பதிவாளர் அலுவலகம் முன்னர் மிகவும் பழமைவாய்ந்த கட்டடத்தில் இயங்கி வந்தது. பொது மக்களின் நலன்கருதி, இக்கட்டடத்தை இடித்துவிட்டு, 300 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத் தளம் மற்றும் முதல் தளம் கொண்ட புதிய அரசுக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நிருவாக அனுமதியும், ரூ.80,90,000/- நிதி ஒதுக்கீடும் செய்து, அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

**திருமதி பொன். சரஸ்வதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு மறையாமல் என்றென்றும் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வழியில் சிறப்பான பல நல்ல திட்டங்களை நாள்தோறும் வழங்கி சிறப்பாக ஆட்சிபுரியும் மாண்புமிகு தமிழ்நாடு*

முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாசியோடு கட்டடம் கட்டும் பணி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**207—**

**புதிய கட்டடம்**

***9843—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

ஈரோடு, மேட்டூர் ரோட்டில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் தற்போது 5,500 சதுர அடி பரப்பளவில் cement sheets போடப்பட்ட பாதுகாப்பான சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் நிலையில், இச்சங்கத்திற்கு மேலும் ஒரு புதிய கட்டடம்